# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:38** **தேதி:07.05.2015**

## பிடித்தம் செய்யப்பட்ட அதிகப்படியான வருமான வரி

அன்பார்ந்த தோழர்களே,

இந்த ஏப்ரல் மாத சம்பளத்தில் அனைத்து ஊழியர்களுக்கும் வருமான வரி பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. அதில் நமது வீடுகட்டும் கடனுக்கான வட்டி, ACCRUED INTEREST, ஊதியத்தில் இல்லாமல் தனியாக கட்டப்படும் LIC உள்ளிட்ட சேமிப்புகள் ஆகியவை கணக்கில் எடுக்கப்படாமல் மிக அதிகமான தொகை பிடிக்கப்பட்டு இருந்தது. முதன்மை பொது மேலாளர் (நிதி) திரு ரவி அவர்களை சந்தித்து, பிடிக்கப்பட்ட வருமான வரியினை திரும்ப ஊழியர்களுக்கு தர வேண்டும் என வற்புறுத்தினோம். இது தொடர்பாக ஊழியர்களுக்கு எந்தவிதமான முறையான தகவலும் தரவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினோம்.

நமது கோரிக்கையின் நியாயத்தை ஏற்றுக் கொண்ட முதன்மை பொது மேலாளர்(நிதி) அவர்கள், கடந்த ஏப்ரல் 21014ல் எத்தனை வருமான வரி பிடிக்கப்பட்டதோ, அதற்கு அதிமாக பிடிக்கப்பட்ட தொகையினை இந்த மாதம் திருப்பித்தர உத்தரவிட்டுள்ளார். உதாரணமாக ஒருவருக்கு ஏப்ரல் 2014ல் 1500 ரூபாய் வருமான வரியாக பிடித்தம் செய்யப்பட்டு இருந்து, தற்போது ஏப்ரல் 2015ல் 3000 ரூபாய் பிடிக்கப்பட்டு இருந்தால் மீதமுள்ள 1500 ரூபாய் ஊழியர்களுக்கு திருப்பித் தரப்படும்.

அதே சமயம் ஒவ்வொரு ஊழியர்களும் இந்த மாதம் 15ம் தேதிக்குள் தங்களின் சேமிப்பு விவரங்களை தலமட்ட கணக்கியல் அதிகாரிகளிடம் சமர்ப்பிக்க வேண்டும். அதற்கான ஆதாரம் ஏதும் இல்லையென்றாலும் ஊழியர்கள் SELF DECLARATION கொடுத்தால் போதுமானது என்றும் ஆதாரம் கிடைத்தவுடன் அதனையும் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் முதன்மை பொது மேலாளர்(நிதி) கேட்டுக் கொண்டுள்ளார். நமது தோழர்களிடம் இதனை எடுத்துரைத்து அவர்களிடம் SELF DECLARATION பெற்று நிர்வாகத்திடம் உரிய காலத்திற்குள் கொடுக்க மாவட்ட/கிளை சங்க செயலர்கள் முன்முயற்சி எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

நமது கோரிக்கையின் நியாயத்தை ஏற்றுக் கொண்டு உடனடியாக உத்தரவிட்ட முதன்மை பொது மேலாளர்(நிதி) திரு ரவி அவர்களுக்கு நமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

**வாழ்த்துக்களுடன்,**

**தோழமையுள்ள,**

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**